# தோடா இனப் பழங்குடிகளின் வாழ்வியல் சடங்குகள்

திருமதி. த. வித்யா,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல்.
E-Mail : senthilkumaran8000@gmail.com

## முன்னுரை

நவீன அறிவியல் புகாத பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்கையைச் சார்ந்து வாழ்தலும், வளர்தலும் குறித்து நம் முன்னோர்கள் கொண்ட அணுகுமுறைகளின் வெளிப்பாடாகச் சடங்குகள் அமைந்துள்ளன. இயற்கை மற்றும் சமூகச் சிக்கலை எதிர்கொள்ளும் முகமாகச் சடங்குகள் உருவாக்கப்பட்டன. இவை வாழ்தலின் போது நல்ல விளைவுகளை எதிர்நோக்கியே உருவாக்கப்பட்டிருக்கின்றன. நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்த பல்வகைச் சடங்குகள் இயற்கைச் சீற்றத்திற்கும் மாற்றத்திற்கும் ஒரு பதிலடியாக ஏற்படத்தப்பட்டவை என்றும் கூறலாம்.

அன்று முதல் இன்று வரை பண்பாடு என்பதை இன்ன தன்மையது என்று ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் பொருத்திக்காண இயலாது. இப்பண்பாடு உள்ளமையில் தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது. அத்தகைய பண்பாடு ஒன்று இல்லையெனில் உலகம் இல்லை. உலகில் உயிர்களின் வாழ்வும் அர்த்தமற்றுப் போகிறது. அத்தகைய பண்பாட்டுடன் தொடர்புடையதாக ஒவ்வொரு சமூகத்தினரின் வாழ்வியல் சடங்குகளும் அமைந்திருக்கின்றன. இத்தகைய சடங்குகள் தோடர்களின் வாழ்வோடு எவ்வாறு பின்னிப் பிணைந்து நிற்கின்றன என்பதைப் பற்றியும் குறிப்பாக பிறப்பு, காதுகுத்துதல், மற்றும் திருமணத்தின்போது செய்யப்படும் சடங்குகளைப் பற்றியும் அறிந்து கொள்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வாழ்வியல் சடங்குகள்

வாழ்வியல் சடங்குகள் அனைத்தும் பிறப்பு மற்றும் இறப்பை மையமாக கொண்டு அமைகின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான ஒவ்வொரு பருவ மாற்றத்தின் போதும் செய்யப்படும் சடங்குகளே வாழ்க்கை வட்டச் சடங்குகள். வாழ்வின் புதிய தகுதிப் பெயர்வினை அடையாளப் படுத்தும் வகையில் நிகழ்த்தப்படும் முறையான செய்முறைகளே இச்சடங்குகள் ஆகும்.

“ஆங்கிலத்தில் ‘Ceremonial’ ‘சடங்கு வினை முறை’ என்றும், ‘Ceremony’ ‘Farewel’ விடைபெறு விழா என்றும், ‘Ceremoney Funeral’ நீத்தார் சடங்கு, ‘Ceremoney nubiliby’ ‘பூப்புனித நீராட்டு விழா’ என்றும் மானிடவியல் கலைச் சொல்லகராதி பொருள் தருகிறது”.[1]

"ஆதிகாலத்திலிருந்து தோன்றிய சடங்குகள் மனித வாழ்வின் ஒவ்வொரு படிநிலையிலும் உடலியலின் நலன் கருதிய வளமைச் சடங்குகளாகவே செய்யப்பட்டு வந்துள்ளன. அவற்றைப் பழங்குடிகளிடமும், தாழ்த்தப்பட்ட மக்களிடமும் காணலாம்".[2]

இவ்வாறாக வாழ்வியல் சடங்குகள் அனைத்தும் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் பின்னிப் பிணைந்துக் காணப்படுகின்றன. அது போன்றே தோடர் இன மக்களும் தங்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பலவகையான சடங்குகளைச் செய்கின்றனர்.

## தோடர்களின் வாழ்வியல் சடங்குகள்

நீலகரியில் வாழும் தோடா இனப் பழங்குடிமக்கள் தங்களுக்கெனத் தனிக் கலாச்சாரத்தையும், சடங்குகளையும் பின்பற்றி மற்ற பழங்குடியினரிடமிருந்து வேறுபட்டு வாழ்கின்றனர். இவர்கள் குழந்தைப் பிறப்பு முதல் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகித், திருமணப் பருவம் எய்தி இறுதியில் நோய்வாய்ப்பட்டு இறக்கும் வரையிலும் பல்வேறு வாழ்க்கை வட்டச் சடங்கு முறைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

இவர்களின் வாழ்வியல் சடங்குகளை ஆறு நிலையில் பகுத்துக் காணலாம்.

(1) குழந்தை பிறத்தல் மற்றும் பெயர் வைத்தல்.
(2) ஆண்களுக்குக் காது குத்துதல்.
(3) பெண்கள் பூப்பெய்துதல்.
(4) திருமணம்.
(5) நோய்வாய்ப் படுதல் மற்றும் இறப்பு.
(6) கோவில் திருவிழா.

என்பனவாகும். இந்நிகழ்வுகளின் போது இவர்களின் பல்வேறு வகையான சடங்கு முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

## குழந்தை பிறத்தலும் பெயரிடுதலும்

குழந்தை பிறந்தவுடன் ஒரு குடிசைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடுத்த அம்மாவாசை வரை அங்கேயே வளர்க்கப்படுகிறது. பெண் குழந்தைகளுக்குப் பிறப்பின் போதும், பெயர் வைக்கும் போதும் எவ்விதச் சடங்குகளும் செய்யப்படுவதில்லை. ஆண்குழந்தைகள் பிறந்தால் மட்டும் யார் கண்ணும் படாமல் மூன்று மாதம் வரை முகத்தை யாரும் பார்க்காதவாறு மறைத்து வைக்கின்றனர். மூன்று மாதங்களுக்குப் பிறகு அக்குழந்தைக்கு பெயர் வைக்கும் ஒரு நாளைப் பெற்றோர்களே முடிவு செய்கின்றனர். அத்தினத்தன்று எல்லா மந்திலும் இருப்பவர்கள் இந்நிகழ்விற்கு வருகின்றனர். இச்சடங்கின் போது அவ்வூர் கோயிலில் (மந்து கோவில்) விளக்கின் ஒளி காட்டப்படுகிறது. அக்குழந்தையை வாழ்த்துவது பற்றி வாக்கர் குறிப்பிடுகையில்,

"இக்குழந்தை நல்ல ஆரோக்கியத்துடனும், வருங்காலத்தில் திடகாத்திரத்துடனும், நிறைய எருமைகளை பிடிக்கவும் (அதாவது இறுதிச் சடங்கில் எருமைகளை அடக்குதல்) அவன் வேகமாக ஓடுபவனாகவும் அதிக புத்திரர்களைப் பெறுபவனாகவும், பெரிய பணக்காரனாகவும் எல்லா முக்கியமான கோயில்களுக்குச் செல்பவனாக இருக்கவும், நன்றாக வளர வேண்டும்". என்று வாழ்துவார்கள் எனக் கூறுகின்றார்[.3]

காது குத்துதல் எனும் இச்சடங்கு தோடர் இன ஆண்களுக்கென நடத்தப்படுவதாகும். ஆண்களின் வயது முதிர்ச்சியை காட்ட இச்சடங்கு நடத்தப்படுகிறது. கோவில் பூசாரியாக இருப்பவர்களும், பூசாரிகளுக்கு உதவி செய்பவர்களும் கட்டாயம் காது குத்துதல் சடங்கைச் செய்திருக்க வேண்டும். இக்காது குத்தும் சடங்கு 10 முதல் 15 வயதிலிருக்கும் ஆண்களுக்கு நடத்தப்படுகிறது.

"பெண்களுக்கு காதுகுத்தும் போது வழக்கமான எந்தவித சடங்குகளுமில்லாமல், குறிப்பிட்ட நபர்களுடன் செய்யப்படுகிறது. தற்போது உதகமண்டலத்தில் அமைந்துள்ள மாரியம்மன் கோயிலில் தாய்மாமன் அல்லது மாமன் உறவுள்ளவர்களால் ஆண்களுக்கும் காது குத்துவது போல் பெண்களுக்கும் காது குத்துகின்றனர். அப்போது பெண்ணின் தந்தை தேங்காய், பழம், பூ, ஊதுபத்தி, வெற்றிலைபாக்கு ஆகியவற்றை வைத்து கோயில் பூசாரிக்குக் கொடுப்பர்".[4]

என்பதை வாக்கர் குறிப்பிடுகிறார். இவ்வழக்கம் மரபு வழக்கமாக அன்றி புதிய வழக்கமாக பின்பற்றுகின்றனர்.

## பெண்கள் பூப்பெய்துதல்

பெண்கள் பருவமடைந்தவுடன் அப்பெண்ணைத் தனிக் குடிசையில் வைக்கின்றனர். பருவமடைந்த நாளிலிருந்து அடுத்த அம்மாவாசை நாள் வரும்வரை பெண் அக்குடிசையில் இருக்க வேண்டும். வீட்டில் எந்த வேலையும் அவள் செய்யக் கூடாது. அப்பெண்ணுக்கு அவள் வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்து கொடுப்பார்கள். இச்சமயத்தில் பால், மோர், வெண்ணெய் போன்றவற்றை இவள் உண்ணக் கூடாது. நெய் மட்டும் கொடுப்பர். ஒரு வயதான பெண் இரவு நேரத்தில் அப்பெண்ணுக்குத் துணையாக இருப்பர்.

அடுத்த அம்மாவாசை வரம் வரை அவர்கள் அங்கு இருப்பார்கள். அம்மாவாசை அன்று குளித்து விட்டுத், தீட்டுக் கழித்து வீட்டிற்கு அழைத்து வருகிறார்கள். இம்முறை தென்னிந்தியாவில் பல சமுதாய மக்களிடையே காணப்படுகின்ற ஒன்றாகும். இச்சடங்கிற்குப் பின் பெண்கள் அன்றாட வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

அக்காலத்தில் பூப்பெய்துதலுக்குப் பிறகு பச்சைக் குத்தும் பழக்கம் வழக்கத்தில் இருந்துள்ளது.

## திருமணச் சடங்குகள்

"ஒரு நம்பியும் ஒரு நங்கையும் கூடித் தொடங்கும் இல்வாழ்க்கையானது திருமணத்தின் மூலம் தான் தொடங்குகிறது. இது எல்லா மதத்தவர், எல்லா இனத்தவர், எல்லா சாதியினர், ஏன் எல்லா நாட்டினருக்குமான பொது நியதியும் சமூக நீதியுமாகும்".[5] என்ற வரிகள், திருமணத்தை மக்கள் எவ்வாறு போற்றிக் காத்துள்ளனர் என்பதை அறிய வைக்கிறது. பொதுவாக, இது போன்ற திருமணங்கள் தான் சமூகத்தில் அதிக அளவில் நடை பெறுகின்றன. ஆனால் தோடர் சமூகத்தில் திருமணம் என்பது பிற திருமண முறைகளிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுகிறது. தோடர்கள் அந்தக் காலத்திலிருந்து இவர்களின் சடங்குப்படி நடக்கும், திருமணங்களையே ஏற்றுக் கொண்டுள்ளனர். காதல் திருமணங்களை, ஏற்றுக் கொள்வதில்லை.

## தோடர்களின் திருமணம்

உலகில் பலவகையான திருமணங்கள் நடந்து வருகின்றன. புதிய புதிய முறைகளில் திருமணங்களை, அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் திருமணங்கள் பொது வகையில் மூன்றே மூன்று முறைகளால் தான் நடத்தப்பகின்றன.

"உலகின் மூன்று வகையான திருமணமுறைகள் தாம் பெரும்பாலும் இன்றும் நடைமுறையில் உள்ளன. அவை ஒரு பெண் பல ஆண்களை மணக்கும் முறை, ஒரு ஆண் பல பெண்களை மணக்கும் முறை, தம் வாழ்நாளில் ஒரு பெண்ணை மட்டும் மணந்து கொள்வது (அந்த பெண் தன் கணவரைத் தவிர வேறு யாரையும் மணக்காமல் இருப்பது. அதாவது ஒருவனுக்கு ஒருத்தி என்னும் பிரபலமான திருமண முறை)".[6] என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றில் தோடர்களின் திருமணம் ஒரு பெண் பல ஆண்களை மணக்கும் முறையை கொண்டதாகும். இதனை 'பல்கணவ மனம்' என்று மானிடவியலார் குறிப்பிடுவார்.

தோடர்கள் தங்களைப் பஞ்சபாண்டவர்களின் வம்சம் என்று கூறிக் கொள்வதும், பஞ்சபாண்டவர்களை வணங்குவதிலிருந்தும் அவர்கள் திரௌபதி பஞ்ச பாண்டவர்களுக்கு மனைவியாக இருந்ததை நினைவு கூறுவதாக அமைகின்றது. இவ்வகையான திருமணங்கள் மற்ற நாடுகளிலும் காணப்படுகின்றன.

## திருமணம் நிச்சயிக்கப்படுதல்

தோடர்கள் பெண் குழந்தை பிறந்த இரண்டு, மூன்று ஆண்டுகளிலேயே அப்பெண்ணுக்கு பையன் ஒருவனை நிச்சயம் செய்து கொள்கின்றனர். இதற்கு அவர்கள் மொழியில் 'நிசம் கிஸ்பினி' என்று பெயர். பொதுவாக அத்தை மகனையோ, மாமன் மகளையோ திருமணத்துக்கென முடிவு செய்கின்றனர்.

"பால்ய விவாகத்தில் பெண்ணுக்குத் துணி கொடுத்து வருங்கால மாமனாரை வணங்குவதுடன் சடங்கு முடிகிறது".

ஒரு பெருங்கால் வழியைச் சார்ந்த தோடர்கள் மற்ற பெருங்கால் வழியில் உள்ளவர்களிடையே திருமணம் செய்வதில்லை. அதே போன்று ஒரு மந்தில் உள்ள ஆண்களும் பெண்களும் உடன் பிறந்தவர் போல் கருதப்படுவதால் தங்கள் மந்துக்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. இம்முறை நீலகிரிப் படகர் இன மக்களிடமும் காணப்படுகிறது.

## திருமணப் பெண்ணை அழைத்து வரல்

நிச்சயிக்கப்பட்ட பெண் பருவமடையும் வரை காத்திருந்து, அப்பெண்ணைப் பெரியவர்கள் சென்று நிச்சயிக்கப்பட்ட ஆணின் மந்துக்கு அழைத்து வருவர். அவ்வாறு அழைத்து வரப்படும் நாளில் எளிமையாகச் சடங்குகள் நடைப்பெறுகின்றன. மணமக்கள் புத்தாடை அணிந்து பெரியோர்களின் காலில் விழுந்து வணங்குவர். வயதில் பெரியவர்கள் வாழ்த்தும் போது தங்களது காலைத் தூக்கிச் சிறியவர்கள் நெற்றியில் வைத்து 'பொதுக் பொதுக்' எனக் கூறி வாழ்த்திப் பணமும் கொடுப்பார்கள். இது தோடர்களுக்கே உரிய தனிப்பட்ட வழக்கமாக இருக்கிறது. வீட்டின் முன் பகுதியில் தண்ணீரும் பூவும் வைத்திருப்பார்கள். அதை எடுத்துக் கொண்டு மணமக்கள் இருவரும் குடிசைக்குள் நுழைவார்கள். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும்.

" தோடர்களிடையே, திருமணம் என்பது புனிதச் சடங்காகவோ காலமெல்லாம் போற்றிக்காக்க வேண்டிய ஒன்றாகவோ இருப்பதில்லை".

## வில்லம்புச் சடங்கு

பெண் கர்ப்பமடைந்த ஏழாவது மாதம் வில்லம்புச் சடங்கு நடத்துகின்றனர். இச்சடங்கினைத் தான் தோடர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இச்சடங்கு நிகழ்வுகள் இரண்டு நாட்கள் நிகழ்கின்றன.

## திருமணநாள் குறித்தல்

பொதுவாகத் தோடர்கள் திருமணம் செய்ய உகந்தாக அம்மாவாசை நாளையே தேர்ந்தெடுக்கின்றனர். அம்மாவாசைக்கு முன் பின் என இரண்டு நாட்களில் இச்சடங்குகள் செய்யப்படுகின்றன. ஜோதிடம் பார்க்கும் வழக்கம் இல்லையெனினும் சாமியாடிக் குறிகூறுவது உண்டு. இவர்களிடையே நல்ல நாள் என்பது அம்மாவாசையையே குறிக்கிறது. ஒரு அம்மாவாசையில் தடைப்பட்ட திருமணங்கள் அடுத்த அம்மாவாசையில் நடைபெறுகின்றன.

## முதல் நாள் சடங்கு - விளக்கேற்றுதல்

திருமண ஏற்பாடு செய்த முதல் நாள் இரவு திருமணப் பெண் அம்மந்திலுள்ள நாகமரத்தில் சிறிய மாடம் ஒன்றினைச் செய்து அதில் மண்ணால் செய்யப்பட்ட விளக்கில் எருமை நெய்யைவிட்டு விளக்கேற்றுவாள். வசதி படைத்தவர்களில் இப்போது பித்தளை விளக்கேற்றுவதும் உண்டு. இவ்வாறு துளையிட்ட விளக்கு மாடங்களைக் கொண்டு எத்தனை திருமணங்கள் அந்த மந்தில் நடந்துள்ளன, என்பதை அறிந்து கொள்ளலாம். இம்மரத்தை இவர்கள் 'நகாமரம்' என்று அழைக்கின்றனர்.

## திருமண தெய்வத்திற்கு உணவு சமைத்தல்

மணவிழா நடக்கும் இடத்தைச் சுத்தம் செய்து வழிபாடு செய்கின்றனர். இரண்டு குச்சிகளை நட்டு வைத்து அதற்கு கருப்புத் துணியை ஆடைகளாகப் போர்த்துவர். இந்த இரண்டு குச்சிகளும் ஆண், பெண் தெய்வங்களாகும். ஆணை 'பீரின்' என்றும் பெண்னை 'பீர்' என்றும் கூறுவர். மணப்பெண் சிறிய பானையில் உணவு சமைத்து தன் கையைத் திருப்பி உணவினைப் படைப்பர்.

## கையில் சூடுபோடுதல்

உணவு சமைத்தலுக்கு இடையில் மணமகளுக்கு சூடுபோடும் சடங்கு ஒன்றினை செய்கினறனர். முதியவள் ஒருத்தி தங்களின் பாரம்பரிய உடையான பூத்துக் குளியின் ஒரு பகுதியைக் கிழித்து அதில் ஏழு திரிகளைச் செய்து உணவு சமைக்கும் அடுப்பில் கையின் மணிக்கட்டுப் பகுதியின் மேல் சூடிடுவாள். இந்நிகழ்ச்சியைப் பற்றி க. ரத்தினம் அவர்கள் குறிப்பிடும்போது "தோடர் குடும்பத்தில் முதன் குழந்தையின் பிறப்பினை எதிர் பார்ப்பவர்கள் அடுத்துவரும் அம்மாவாசையின் போது 'உர் எவர்ட் பிம்பி' என்ற சடங்கினை நிகழ்த்துவர். அச்சடங்கின் போது முதியவள் ஒருத்தி பழந்துணி ஒன்றினைத் திரிபோலச் சுருட்டி எண்ணெயில் தேய்த்து தீ பற்ற வைத்துக் கருத்தரித்துள்ள பெண்ணின் வலது மற்றும் இடது கைபெருவிரலிலும் இரு கைகளின் மணிக் கட்டிலுமாக நான்கிடங்களிலும் சூடிடுவாள்" என்கிறார்.

மேலும் சில சமயங்களில் அதிகம் காய்ச்சலுக்கு உள்ளாகுபவர்களுக்கும், உயிரிழக்கும் நிலையில் உள்ளவர்களைக் காப்பாற்றவும், சூடிடுவதை, ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு சூடிடக் கண்ணாடி வளையல் துண்டு, தோல், வேப்பங்குச்சி, மஞ்சள் துண்டு ஆகியவற்றில் ஏதாவதொன்றை இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

விளக்கேற்றுதல், தெய்வத்திற்கு உணவுப் படைத்தல், கையில் சூடுபோடுதல் போன்று முதல் நாள் சடங்குகள் பெண்களுக்கு மட்டுமே செய்யப்படுகின்றன. ஆண்கள் மந்துகளுக்கு எதிரே இருக்கும் வீரக்கல்லை இருகரங்களிலும் எடுத்து, அதனை மார்பகத்திற்கு மேல் உயர்த்திச் சுமப்பது வீர விளையாட்டாகக் கருதப்படுகிறது. இவ்வாறு சுமப்பவர்களை திருமணத்திற்கு

தகுதிவாய்ந்தவர்களாகக் கருதுவர். தற்போது தோடர்களிடையே இச்சடங்கும் மெல்ல மெல்ல மறைந்து வருகிறது. சிறுவயதிலேயே இல்வாழ்வில் ஈடுபட்டு விடுவதால் இச்சடங்கினைச் செய்வதில்லை என்று இவ்வினப் பெரியவர்கள் கூறுகின்றனர்.

## வில்லம்புச் சடங்கு

இரண்டாம் நாளின் முக்கிய நிகழ்வாக நடத்தப்படுவது இச்சடங்காகும். மணமகன் அருகில் இருக்கும் காட்டிற்கு சென்று திவிரிசெடி என்று அழைக்கப்படும் ஒரு வகை கொடியினை பறித்து வில் அம்பு போன்ற ஒன்றினை செய்து வருவான். அதுவரையில் மணப்பெண் நாகமரத்தின் அடியில் விளக்கினை உற்று நோக்கி காத்திருப்பாள். மணமகன் அவ்வில் அம்பினை நாகமரத்தின் சாட்சியாக அவளிடம் கொடுப்பான். அன்றிலிருந்து அப்பெண்ணிற்கு அவன் மரபுப்படி கணவனாகிறான். மணமக்களை தனிமையில் விட்டு அனைவரும் சென்று விடுவர். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும். அத்துடன் மணமக்கள் பெரியவர்களிடம் ஆசிபெறுவர்.

திருமண முறிவும் இவர்களின் விருப்பப்படி நிகழ்கிறது. மதம் மாறிய கிறித்துவ தோடர்களும் கிறித்துவ முறைப்படி திருமணம் செய்துகொள்கின்றனர்.

## தொகுப்புரை

குழந்தைப் பிறப்பின் போதும், காது குத்தும் சடங்கின் போதும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தோடர்களின் திருமணம் பல்கணவ முறையைச் சார்ந்ததாகும். திருமண நிகழ்வினை இரண்டு நாட்கள் நடத்துகின்றனர். திருமண நிகழ்வின் முக்கிய நிகழ்வாக கையில் சூடுபோடுதல், நாகமரத்தில் விளக்கு வைத்தல், வில் அம்பு கொடுத்தல் போன்றவை முக்கிய நிகழ்வாகும். அனைத்து சடங்குகளின் போதும் விருந்தும் நடனமும் தங்களது கலாச்சார ஆடையில் நடைப்பெறுவது சிறப்பானதாகும்.

## குறிப்புகள்

1. சு. சக்திவேல், மானிடவியல் கலைச் சொல்லகராதி, பக்க எண்: 34.
2. க.அ. ஜோதிராணி, தமிழர் பண்பாட்டில் சடங்குகள், பக்க எண்: 99.
3. Anthony R. Walker, The Toda of South India, Page No: 198.
4. மேலது, பக்க எண்: 202.
5. திரு. மா.பொ. சிவஞானம், தமிழர் திருமணம், பக்க எண்: 5.
6. மேலது, பக்க எண்: 5.
7. சு. சக்திவேல், நீலகிரி தோடாப் பழங்குடிகள், பக்க எண்: 85.
8. மேலது, பக்க எண்: 85.